©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No. 43] CHENNAI, FRIDAY, FEBRUARY 19, 2010
Maasi 7, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், கஞ்சனூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

[*ந.க.எண் அ3/1594/08/உ.இ.(ஊ).*]

**No. VI(2)/60(a)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலையே செய்யாமல் போலியான ஆவணங்களை தயாரித்து வேலை செய்தது போன்று தினசரி வருகைப் பதிவேட்டில், வேலை ஆட்களின் கையொப்பத்தை போலியாக இட்டுள்ள காரணத்தினாலும், ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு திட்டத்தில் முறைகேடு செய்து, ஏழை எளிய கிராமப்புற வேலையற்ற மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான வேலை வாய்ப்பை பறித்து அரசின் சீரிய திட்டமான தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை சீர்குலைத்த கஞ்சனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ஏ. சாந்தி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2010 பிப்ரவரி 17.

**இரா. பழனிசாமி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (43)